**ஆகஸ்ட் - 3**

**"தேசத்தின் ஜனங்களை விட்டு விலகுங்கள்." - எஸ்றா 10 : 11.**

"இவ்வுலகத்திலிருக்கிற கிறிஸ்தவன் சமுத்திரத்திலுள்ள ஒரு கப்பலைப் போன்றவன். கப்பலின் உள்ளே இல்லாதவரை கப்பல் பத்திரமாக இருக்கிறது." இவ்வாறு யாரோ ஒருவர் நன்றாகச் சொல்லியிருக்கிறார். இன்றைக்குக் கிறிஸ்து மார்க்கத்திலுள்ள பெரிய கஷ்டங்களில் ஒன்று என்னவென்றால், அது அந்நியரை, "தேசத்தின் ஜனங்களை" அதனுள் சேர்த்துக்கொண்டு அவர்களை கிறிஸ்தவர்கள் என்று அங்கீகரித்திருப்பதுதான். இது கிறிஸ்தவர்களுடைய நிலைமை தாழ்த்தி அவர்களுக்குத் தீங்கு செய்வதோடல்லாமல், தாங்கள் முற்றிலுமாகப் பத்திரமாக இருக்கிறதாகவும், ஏனென்றால், தாங்கள் வெளிப்படையாக மரியாதைக்குரியவர்களாக இருக்கிறதாலும், அடிக்கடி பொது ஆராதனைகளில் பங்கு கொள்ளுகிறதினாலும், மனம்திரும்புதல் அவசியமில்லை என்றும், அந்நியரில் அநேகரை நம்பச் செய்து இவ்விதமாக அவர்களுக்கும் தீங்கு செய்கிறது. **- Z ’99, 203(R 2510)**

தேவனுடைய ஜனங்கள் தேவனுடைய ஊழியத்திற்கென்று மற்ற எல்லாரிலுமிருந்து பிரிக்கப்பட்ட ஒரு பரிசுத்த ஜாதியாயிருக்கிறார்கள். அவர்களுடைய விசுவாசமும், ஆவியும், நம்பிக்கையும், நோக்கங்களும் இயல்பான மனுஷனுடையதிலிருந்து வேறுபட்டதாயிருக்கின்றன. இந்த இரண்டு வகுப்பாரும் அவ்வளவு மாறுபட்டவர்களாயிருக்கிறபடியால், அவர்கள் ஒருவரோடொருவர் ஐக்கியமாவதற்காக எடுக்கப்படுகின்ற பிரயத்தனம் விசனமுள்ளதாயும், ஆபத்தானதாயும் முடியும். இப்படிப்பட்ட சவகாசம் விசேஷமாக தேவனுடைய ஜனங்களுக்குப் பிரதிகூலமாக இருக்கும். இரண்டு வகுப்பாருடைய நலனுக்காக அவர்கள் பிரிந்திருப்பது அவசியமாயிருக்கிறது. ஆகையால்தான் "என் ஜனங்களே அவளை விட்டு வெளியே வாருங்கள்" என்று அவர்களுக்குப் புத்தி சொல்லப்படுகிறது. இந்தப் பிரிவினை ஏற்பட்டபின்பு, உண்மையுள்ளவர்கள் கர்த்தரோடும், ஒருவரோடொருவருடனும் நெருங்கிய ஐக்கியத்திற்குள் பிரவேசிக்கிறார்கள். **- P ’33, 110, 111.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

**எண் 16:21,26; எஸ்றா 6:21; நீதி 9:6; ஏசா 48:20; 52:11; எரே 51:9; அப் 2:40; 2கொரி 6:17-7:1; வெளி 18:4; 1கொரி 6:11; எபே 5:25-27; 1தெச 4:3,4; 2தீமோ 2:21; 2பேது 1:4.**

**கோபுர வாசிப்பு : Z ’12, 370 (R 5138).**

**வினாக்கள்: இந்த வாரத்தில் நான் கெட்ட மனிதர்களிடமிருந்தும், தீயகாரியங்களிலிருந்தும் என்னைச் சுத்திகரித்தேனா? எவ்வாறு? ஏன்? பலன்கள் எவை?**